இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 319 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – ஆனி 15 – சனிக்கிழமை 29 ஜூன் 2024 – சென்னை 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 319 : Thiruvalluvar Year - 2055 - Aani 15 - Saturday 29 June 2024 - Chennai 16 Pages ₹ 5.00

## தமிழ்நாட்டின் குரல் இன்றைக்கு இந்தியாவின் குரலாக எதிரொலிக்கிறது!

# தேசிய அளவில் ‘நீட்’ தேர்வை அகற்றிடுக!

## சட்டப்பேரவையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் தனித் தீர்மானம்!

**சென்னை, ஜூன் 29-**

**தேசிய அளவில் நீட் தேர்வை அறவே அகற்றிடுக என்று ஒன்றிய அரசை வலியுறுத்தி முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனித் தீர்மானம் கொண்டு வந்தார். இத்தீர்மானத்தில் உரையாற்றிய முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் ‘நீட் தேர்வு ரத்துச் செய்யப்படுவது குறித்த தமிழ்நாட்டின் குரல் இன்று இந்தியாவின் குரலாகவே எதிரொலிக்கிறது’ என்று தெரிவித்தார். முதல்வரின் தனித் தீர்மானம் பின்னர் ஒரு மனதாக நிறைவேறியது.**

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், நீட் விலக்கு சட்டமுன்வடிவிற்கு ஒன்றிய அரசு உடனடியாக ஒப்புதல் அளித்திட வலியுறுத்தி தீர்மானத்தை முன்மொழிந்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:-

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருத்துவத் துறையிலும், பல்வேறு பொது சுகாதாரக் குறியீடுகளிலும் நாட்டிற்கே முன்னோடியாக நம்முடைய தமிழ்நாடு திகழ்கிறது. பல ஆண்டுகளாக நமது தமிழ்நாட்டில் பின்பற்றப்பட்ட சிறப்பான மருத்துவக் கல்வி மாணவர் சேர்க்கை முறைதான் இந்தச் சாதனைகளுக்கு அடிப்படையாக விளங்குகிறது. முனைவர் அனந்த கிருஷ்ணன் தலைமையிலான குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் மருத்துவம் உள்ளிட்ட அனைத்துத் தொழிற்பட்டப் படிப்புகளுக்கான நுழைவுத் தேர்வை இரத்து செய்து இந்தச் சாதனைகளுக்கு அடித்தளம் அமைத்தவர் முத்தமிழறிஞர் கலைஞர். (மேசையைத் தட்டும் ஒலி)

### ஏழை எளியோர்க்கு எட்டாக்கனி!

பள்ளிக்கல்வி மதிப்பெண்களின் அடிப்படையில், சமூகநீதியையும், அனைத்துப் பிரிவு மாணவர்களுக்கு சமவாய்ப்பையும் உறுதிசெய்யக்கூடிய முன்னோடி சேர்க்கை முறையை நாம் பின்பற்றி வருகிறோம். இந்த முறையால்தான் தமிழ்நாட்டின் அனைத்துப் பகுதிகளில் இருந்தும் மருத்துவர்கள் உருவாகவும், அனைத்துப் பகுதிகளுக்கும் சிறப்பான மருத்துவ சேவைகளை வழங்கிடவும் முடிந்தது.

ஆனால் 2017 ஆம் ஆண்டில் மருத்துவ மாணவர் சேர்க்கைக்கு நீட் தேர்வை ஒன்றிய அரசு கட்டாயமாக்கிய பின்பு, இந்த நிலை முற்றிலும் மாறி, மருத்துவப் படிப்பு என்பது ஏழையெளிய மாணவர்களுக்கு எட்டாக்கனி ஆகிவிட்டது. பயிற்சி வகுப்புகளுக்குச் செல்ல முடியாத கிராமப்புற, ஏழையெளிய மாணவர்களால் இந்தத் தேர்வில் வெல்ல இயலாது. அதுமட்டுமல்ல; கிராமப்புறப் பகுதிகளிலும் பின்தங்கிய பகுதிகளிலும் வழங்கப்படும் மருத்துவ சேவைகளையும் எதிர்காலத்தில் இந்த முறை பாதிக்கும்.

இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டுதான், நீட் நுழைவுத் தேர்வு அறிமுகப்படுத்தப்பட்ட காலத்திலிருந்தே, அதனை அரசியல்ரீதியாகவும், சட்டரீதியாகவும் தொடர்ந்து எதிர்த்து வருகிறோம். தி.மு.க. சார்பில் மட்டுமல்ல; கழக இளைஞரணி சார்பிலும் பல்வேறு போராட்டங்கள் நடத்தப்பட்டன. குறிப்பாக, மாணவர் அணியையும், மருத்துவர் அணியையும் ஒருங்கிணைத்து, “நீட் விலக்கு நம் இலக்கு” என்ற மாபெரும் கையெழுத்து இயக்கம் நடத்தப்பட்டது. இவற்றையெல்லாம் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் தம்பி உதயநிதி அவர்கள் தன்னுடைய பரிந்துரையில் விரிவாக எடுத்துச் சொல்லியிருந்தார்.

### சட்டப் பேரவையில் ஒருமனதாகத் தீர்மானம்!

நீட் தேர்வு விவகாரத்தில் தமிழ்நாட்டு மக்கள், அரசியல் கட்சிகள், சமூகச் சிந்தனையாளர்கள் என அனைவரிடமும் அசைக்கமுடியாத கருத்தொற்றுமை நிலவி வருகிறது. இதனடிப்படையில், ஓய்வுபெற்ற நீதியரசர் ஏ.கே.இராஜன் அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்ட உயர்நிலைக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில், இந்தச் சட்டமன்றப் பேரவையில் 13.09.2021 அன்று தமிழ்நாடு மருத்துவப் பட்டப் படிப்புகளுக்கான சேர்க்கைச் சட்டம், 2021 என்ற சட்டமுன்வடிவு ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது. ஆனால், நீண்ட சட்டப் போராட்டத்திற்குப் பிறகும் ஆளுநரால் அதற்கான ஒப்புதல் வழங்கப்படாமல், மறுபரிசீலனை செய்திட திருப்பி அனுப்பப்பட்டது.

இந்நிலையில், என் தலைமையில் 05.02.2022 அன்று அனைத்துக் கட்சி கூட்டம் நடத்தப்பட்டு, இந்தச் சட்டமுன்வடிவினை மீண்டும் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்துவது தொடர்பான தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டு, 08.02.2022 அன்று சட்டமுன்வடிவு மீண்டும் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் நிறைவேற்றப்பட்டது. குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்காக ஒன்றிய அரசுக்கு ஆளுநரால் அனுப்பப்பட்டு, இதுகுறித்து ஒன்றிய அரசால் கோரப்பட்ட அனைத்து விளக்கங்களுக்கும் தமிழ்நாடு அரசு உடனுக்குடன் உரிய பதில்களை வழங்கியுள்ள நிலையிலும், இதற்கு ஒப்புதல் அளிக்காமல் ஒன்றிய அரசு காலம் தாழ்த்தி வருகிறது.

> **பல ஆண்டு காலமாக நீட் தேர்வுக்கு எதிராக, தமிழ்நாடும், தமிழ்நாட்டு மக்களும் தனியே போர் தொடுத்து வந்த நிலையில், நீட் தேர்வின் உண்மையான அவலநிலையை உணர்ந்து, பல்வேறு மாநிலங்களிலும் இதற்கு எதிரான எதிர்ப்பு கிளம்பி வருகின்றது. தமிழ்நாட்டின் குரல் இன்று இந்தியாவின் குரலாக நாடு முழுவதும் எதிரொலிப்பதை அண்மை நிகழ்வுகள் காட்டுகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)**

இந்த நிலையில், அண்மையில் நடைபெற்ற நீட் தேர்வின் போது அரங்கேறியுள்ள சம்பவங்கள், போட்டித் தேர்வுகளில் மீது நமது மாணவர்கள் வைத்துள்ள நம்பிக்கையையே நிலைகுலையச் செய்துள்ளன.

இதுவரை இருந்திராத அளவிற்கு, அதிக எண்ணிக்கையில் மாணவர்கள் முழு மதிப்பெண் பெற்றது.

### அண்மைச் சம்பவங்களால் ஏற்பட்டுள்ள அவலங்கள்!

தேர்வுகள் காலதாமதமாகத் தொடங்கியதாகக் காரணம் காட்டி, விதிகளில் இல்லாத முறையில் கருணை மதிப்பெண்கள் வழங்கப்பட்டன. இதற்கு எதிர்ப்புகள் கிளம்பியதால், இந்தக் கருணை மதிப்பெண்கள் ரத்து செய்யப்பட்டு, இவர்களுக்கு மறுதேர்வு நடத்தப்பட்டது.

பல்வேறு தேர்வு மையங்களில் தேர்வுக்கு முன்னரே வினாத்தாள் வெளியானதாக தகவல்கள்.

தேர்வு மையத்தில், தேர்வுக் கண்காணிப்பாளரே விடைத்தாள்களை நிரப்பிய ஊழல் எனக் குவிந்துள்ள பல்வேறு குற்றச்சாட்டுகள், பல ஆண்டுகாலம் உழைத்து, பெரும் செலவழித்து, இந்தப் போட்டித் தேர்வுக்குத் தயாரான மாணவர்களையும் அவர்களின் குடும்பங்களையும் அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளன.

### இந்தியாவின் குரலாக ஒலிக்கும் தமிழ்நாட்டின் குரல்!

இந்தக் குற்றச்சாட்டுகளை முற்றிலுமாக மறுத்து, தவறே நடைபெறவில்லை என்று கூறிய ஒன்றிய அரசு, பின்பு மாண்பமை உச்சநீதிமன்றத்தில் குட்டு வாங்கிய பின்னரே, இந்தத் தேர்வை நடத்தும் NTA அமைப்பின் தலைவரை மாற்றியுள்ளது. தேர்வு முறைகேடுகள் குறித்து எழுப்பப்படுள்ள குற்றச்சாட்டுகள் குறித்து சி.பி.ஐ. விசாரணைக்கு ஆணையிட்டுள்ளது.

தொடர்ச்சி 4ஆம் பக்கம்



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (28.06.2024) சட்டமன்றப் பேரவையில், நீட் விலக்கு சட்டமுன்வடிவிற்கு ஒன்றிய அரசு உடனடியாக ஒப்புதல் அளித்திட வலியுறுத்தி கொண்டுவரப்பட்ட தீர்மானத்தை முன்மொழிந்து உரையாற்றினார்.

# ‘நீட்’ முறைகேடுகள்: ராகுல் காந்தி பேசும் போது மைக் துண்டிப்பு !

## மக்களவை நாள் முழுவதும் ஒத்திவைப்பு !

*புதுடெல்லி, ஜூன் 29-*

*நாடாளுமன்றத்தில் நீட் முறைகேடுகள் குறித்து உடனடியாக விவாதம் நடத்த எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி வலியுறுத்தியபோது அவரது மைக் திடீரென துண்டிக்கப்பட்டதால் கடும் அமளி ஏற்பட்டது.*

*மக்களவைக் கூட்டம் தொடங்கியதும் எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி, நீட் பிரச்சினையை எழுப்பினார். நாடு முழுவதும் மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ள முக்கிய பிரச்சினையான நீட் முறைகேடுகள் குறித்து உடனடியாக விவாதிக்க வேண்டும் என்று வலியுறுத்தினார். குடியரசுத் தலைவர் உரை மீதான விவாதத்தை ஒத்திவைத்து விட்டு, நீட் தொடர்பாக விவாதிக்க கோரிக்கை விடுத்தார்.*

*ஆனால், ராகுலின் கோரிக்கையை ஏற்க சபாநாயகர் மறுத்துவிட்டார். ராகுல் காந்தி பேசிக் கொண்டிருந்த போது அவரது மைக் திடீரென துண்டிக்கப்பட்டது. இதற்கு கடும் எதிர்ப்பு தெரிவித்து காங்கிரஸ், தி.மு.க. உள்ளிட்ட இந்தியா கூட்டணி எம்.பி.க்கள் முழக்கமிட்டனர்.*

*தொடர்ந்து அவை 12 மணிக்கு ஒத்திவைக்கப்பட்டு பின்னர் மீண்டும் கூடியது. அப்போதும், நீட் குறித்து விவாதிக்க இந்தியா கூட்டணி எம்.பி.,க்கள் தொடர்ந்து வலியுறுத்தினர். இதற்கு அனுமதி மறுத்த சபாநாயகர் அவை நாள் முழுவதும் ஒத்திவைப்பதாக அறிவித்தார்.*



*இதேபோல், மாநிலங்களவையிலும் நீட் தொடர்பாக எதிர்க்கட்சி உறுப்பினர்கள் முழக்கமிட்டனர். நீட் முறைகேடு விவகாரத்தில் ஒன்றிய கல்வி அமைச்சர் ராஜினாமா செய்ய வேண்டும் என்று வலியுறுத்தினர்.*

*நீட் முறைகேடு குறித்து விவாதிக்க வலியுறுத்தி இரு அவைகளிலும் தி.மு.க. சார்பில் நோட்டீஸ் அளிக்கப்பட்டுள்ளது.*

*நீட் முறைகேட்டால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்குநாம் ஆறுதலாக ஒரு செய்தியை சொல்ல வேண்டும் மாணவர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து நீட் குறித்து இங்கே விவாதிக்க வேண்டும் நாடாளுமன்றத்தில் நீட் தொடர்பாக விவாதம் நடத்தப்பட வேண்டும் என்பதே எங்களது கோரிக்கை என்று ராகுல் காந்தி வலியுறுத்தினார்.*

*நீட் நுழைவுத்தேர்வில் நடந்துள்ள முறைகேடு நாடுமுழுவதும் மாணவர்களை பாதித்துள்ளது*

*நாடுதழுவிய பிரச்சினையாக மாறியுள்ள நீட் முறைகேடு குறித்து விவாதிக்க வேண்டும் எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி நீட் முறைகேடு தொடர்பாக நாடாளுமன்ற இரு அவைகளிலும் பிரதமர் மோடி விளக்கம் அளிக்க வேண்டும்*

*இந்தியா முழுவதும் உள்ள இளைஞர்களின் எதிர்காலத்தை நீட் தேர்வு முறைகேடு பாதித்துள்ளது என்றும் ராகுல் காந்தி குறிப்பிட்டார்.*

## நாட்டின் உள்கட்டமைப்புகளின் சீர்குலைவிற்கு

# மோடியின் 10 ஆண்டுகால ஆட்சியின் ஊழலே காரணம்!

## அகில இந்திய காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே குற்றச்சாட்டு!

*புதுடெல்லி, ஜூன் 29-*

*நாட்டின் உள்கட்டமைப்புகள் சீர்குலைந்ததற்கு பிரதமர் மோடியின் 10 ஆண்டுகால ஆட்சியின் ஊழலே காரணம் என்று காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே குற்றம் சாட்டியுள்ளார்.*

*டெல்லி விமான நிலைய மேற்கூரை இடிந்து விழுந்த விவகாரம் தொடர்பாக, கார்கே வெளியிட்ட சமூக வலைதளப்பதிவில் தெரிவித்துள்ளதாவது:-*

*பிரதமர் மோடியின் 10 ஆண்டுகால ஆட்சியில் அரங்கேறிய ஊழல்கள், அலட்சியங்களால் நாட்டின் உள்கட்டமைப்பு வசதிகள் சீட்டுக் கட்டை போல சரிந்து வருவதாக விமர்சித்துள்ளார். டெல்லி விமான நிலைய மேற்கூரை விழுந்தது, ஜபல்பூர் விமான நிலைய மேற்கூரை இடிந்தது, அயோத்தியின் புதிய சாலையின் பரிதாப நிலை, ராமர் கோவிலில் மழைநீர் கசிவு, மும்பை துறைமுக சாலையில் விரிசல், பீகாரில் ஓராண்டில் 13 புதிய பாலங்கள் இடிந்து விழுந்தது, குஜராத்தில் மோர்ஃபி பாலம் இடிந்து விழுந்தது போன்றவை மோடி ஆட்சியில் உள்கட்டமைப்புகள் சீர்குலைந்ததற்கு சில உதாரணங்கள் தான் என்று குறிப்பிட்டுள்ளார்.*



*உலகத்தரம் வாய்ந்த உள்கட்டமைப்புகள் ஏற்படுத்துவதாக கூறிய மோடி மற்றும் பா.ஜ.க. வினரின் வெற்றுப்பேச்சுகள் அம்பலப்பட்டு இருப்பதாக குற்றம் சாட்டியுள்ளார்.*